செ.வெ.எண்: 01 நாள்: 01.04.2017

# அரியலூர் மாவட்டத்தில் மின்னணு குடும்ப அட்டையினை (SMART CARD) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப. அவர்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கினார்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று மின்னணு குடும்ப அட்டை (SMART CARD)** குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கி துவக்கி வைத்ததை தொர்ந்து, அரியலூர் மாவட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் மூலம் **அரியலூரில் உள்ள** VSP II **நியாய விலைக்கடையில் மின்னணு குடும்ப அட்டையினை** (SMART CARD) குடும்ப அட்டைத்தாரர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (31.03.2017) வழங்கினார்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் மொத்தம் **442** பொது விநியோக நியாயவிலைக்கடைகள் செயல்பட்டு வருகிறது. இக்கடைகள் மூலம் **210666** குடும்ப அட்டைகள் நடைமுறையில் உள்ளது. இந்த குடும்ப அட்டைகளுக்கு தமிழக அரசின் சீரிய முயற்சியால் மின்னணு தொழில் நுட்பத்தில் (Digital Technology) பழைய குடும்ப அட்டைகளுக்கு பதிலாக புதிய **மின்னணு குடும்ப அட்டைகளாக** (Smart Card) இன்று (01.04.2017) முதல் இம்மாவட்டத்தில் அனைத்து நியாயவிலைக்கடைகளிலும் வழங்கப்படவுள்ளது.

இம்மாவட்டத்தில் உள்ள **210666** குடும்ப அட்டைகளில் **82302** மின்னணு குடும்ப அட்டைகள் (Smart Card) முதற்கட்டமாக வரப்பெற்றுள்ளது. இதனைத்தொடர்ந்து, அரியலூர் மாவட்டம் R1145 கோவிந்தபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தால் நடத்தப்படும் VSP II நியாய விலைக்கடையில் **1228** குடும்ப அட்டைகளுக்கு **463** மின்னணு குடும்ப அட்டைகள் (Smart Card) வரபெற்று இன்று (01.04.2017) வழங்கப்பட்டது. மீதமுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு விரைவில் மின்னணு குடும்ப அட்டை (Smart Card) வழங்கப்படும்.

மேலும், குடும்ப அட்டைதாரர்கள் நியாய விலைக்கடைகளில் பதிவுசெய்த கைபேசி எண்ணிற்கு மின்னணு குடும்ப அட்டை (Smart Card) சம்மந்தமாக **குறுஞ்செய்தி** (SMS) வரும், இதனை நியாயவிலைக்கடைகளில் காண்பித்து மின்னணு குடும்ப அட்டையினை (Smart Card) பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் **செய்தியாளர்களிடம்** தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.தனசேகரன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.கதிரேசன், மண்டல இணைப்பதிவாளர் திரு.தயாளன், வட்ட வழங்கல் அலுவலர் திரு.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.